# உம்றா

மக்கா சென்று உம்றாவை நிறைவேற்றுவதற்காகப் புனிதப், பயணம் மேற்கொண்டவர் மேலே விவரிக்கப்பட்ட மீகாத் எனும் எல்லையை அடைந்தவுடன் இஹ்ராம் கட்டிக் கொள்ள வேண்டும்.

لَبَّيْكَ عُمْرَةً "லப்பைக உம்றதன்"

அல்லது

اللَّهُمَّ لَبَّيْكَ عُمْرَةً

"அல்லாஹும்ம லப்பைக உம்றதன்"

என்று நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்.

மக்காவுக்குச் சென்றதும் அல்மஸ்ஜிதுல் ஹராம் — எனும் புனிதமிகு பள்ளிவாசலுக்குச் செல்ல வேண்டும். அங்கு வலது கால் வைத்து நுழைந்து பின்வரும் துஆவை ஓதுவது சுன்னத் — நபி வழி ஆகும்.

بِسْمِ اللّٰهِ وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ اَعُوْذُ بِاللّٰهِ الْعَظِيْمِ وَبِوَجْهِهِ الْكَرِيْمِ وَسُلْطَانِهِ الْقَدِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۔ اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ ۔

பிஸ்மில்லாஹி வஸ் ஸலாது வஸ் ஸலாமு அலா ரஸூலில்லாஹி அவூது பில்லாஹில் அளீம் வபி வஜ்ஹிஹில் கறீம் வ ஸுல்தானிஹில் கதீம் மினஷ் ஷைத்தானிர் ரஜீம் அல்லாஹும்ம ஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மதிக.

"அல்லாஹ்வின் திருப்பெயரால்! இறையருளும் சாந்தியும் இறைத்தூதர் மீது உண்டாவதாக. மகத்துவம் கொண்ட அல்லாஹ்வைக் கொண்டும் அவனது திருமுகத்தைக் கொண்டும் அவனது நிலையான மேலாதிக்கத்தைக் கொண்டும் விரட்டப் பட்ட சாத்தானை விட்டு பாதுகாப்பு தேடுகின்றேன்! அல்லாஹ்வே, உன்னுடைய கருணை வாயில்களை எனக்குத் திறந்து விடுவாயாக!"

வேறு எந்தப் பள்ளிவாசலில் நுழையும் போதும் இந்தத் துஆவை ஓதலாம்.

புனிதக் கஅபா ஆலயத்தைப் பார்த்ததும் தல்பியாச் சொல்வதை நிறுத்தி விட வேண்டும். பிறகு நேராக கஅபாவுக்குச் சென்று தவாஃபை ஆரம்பிக்க வேண்டும்.

Scanned with CamScanner

# தவாஃப்

தவாஃப் — கஅபாவை வலம் வரத் துவங்கும் போது பின்வரும் துஆவை ஓதுவது விரும்பத் தக்கதாகும்:-

اَللّٰهُمَّ اِيْمَانًا بِكَ، وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً بِعَهْدِكَ
وَاتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ.

அல்லாஹு்ம்ம ஈமானன் (ம்) பிக வதஸ்தீகன்(ம்) பிகிதாபிக வ வஃபாஅன் பிஅஹ்திக வத்திபா அன் லி ஸு்ன்னதி நபிய்யிக முஹம்மதின் ஸல்லல்லாஹு் அலைஹி வஸல்லம்.

அல்லாஹ்வே, நான் உன்மீது ஈமான் கொண்டவனாகவும் உன் வேதத்தை உண்மையானது என ஏற்றுக் கொண்டவனாகவும் உன்னிடம் முன்னர் செய்துகொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றியவனாகவும் உனது திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றியவனாகவும் உள்ளேன்.

கஅபா ஆலயத்தின் தென் கிழக்கு மூலையில் பொருத்தப் பட்டிருக்கும் 'ஹஜருல் அஸ்வத்' கல்லிலிருந்து தவாஃபை தொடங்க வேண்டும். தவாஃப் செய்பவர் தனது வலது கரத் தால் அதனைத் தொட்டு

பிஸ்மில்லாஹி அல்லாஹு் அக்பர்

— அல்லாஹ்வின் பெயர்கொண்டு! அல்லாஹ் மிகப் பெரியவன் என்று சொல்ல வேண்டும்.

ஹ்ஜருல் அஸ்வத் கல்லை இவ்வாறு தொடுவதற்கு 'இஸ் திலாம்' என்று பெயர். பிறகு அதனை முத்தமிட வேண்டும். இவ்வாறு அதனை முத்தமிடும்போது பிற ஹாஜிகளை இடித் துத் தொந்தரவு கொடுப்பதிலிருந்து தவிர்ப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கூட்டம் அதிகமாக இருப்பதனால் அதனை முத்தமிட இயலவில்லையானால், கையினாலோ நீண்ட குச்சி யினாலோ அதனைத் தொட்டுக் கையையோ குச்சியையோ முத்தமிட்டால் போதும். இப்படி எந்த வகையிலும் ஹஜருல் அஸ்வதை நெருங்க முடியவில்லையென்றால் தனது வலது கரத்தால் அதன் பக்கம் சுட்டிக் காட்டி அல்லாஹு் அக்பர் — 'அல்லாஹ் மிகப்பெரியவன்' என்று சொல்ல வேண்டும். இப்போது தன் கையை முத்தமிட வேண்டியதில்லை.

Scanned with CamScanner

இந்த தவாஃப் — (வலம்) ஏழு சுற்றாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உம்றாவுக்காகச் செய்யும் தவாஃபில் முதல் மூன்று சுற்றில் கொஞ்சம் வேகமான நடையை மேற்கொள்ளவேண்டும். இதற்கு 'ரமல்' என்று கூறப்படுகிறது. மற்ற சுற்றுக்களில் சாதாரண நடையை மேற்கொள்ள வேண்டும். ஆண்கள் மட்டுமே முதல் மூன்று சுற்றுகளில் வேகமான நடையை மேற்கொள்ள வேண்டும். பெண்கள் ஏழு சுற்றுகளிலும் சாதாரணமாகத் தான் நடந்து செல்ல வேண்டும்.

உம்றாவுடைய தவாஃபுக்குரிய மற்றொரு சிறப்பான நடைமுறை இள்திபாஉ ஆகும். இது மேலங்கியை அணிவதன் ஒரு முறையாகும். அதன் விவரம் வருமாறு:- மேலங்கியை வலது அக்குளின் கீழ் சுற்றிகொண்டு வந்து அதன் இரு நுனிகளையும் இடது புஜத்தில் போடவேண்டும். வலது புஜத்தைக் காலியாக திறந்தவாறு விட்டுவிட வேண்டும்.

இவ்வாறு அணிவது சுன்னத் ஆகும். இவ்வாறு உம்றாவுடைய தவாஃபின் நடுவில் செய்ய வேண்டும்.

இங்கு ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும்; அதாவது, புனிதப் பயணம் மேற்கொள்ளும் சிலர் இஹ்ராம் கட்டும் போதே இவ்வாறு 'இள்திபாஉ' முறையில் மேலங்கியை அணிந்து கொள்கின்றனர். உம்றா அல்லது ஹஜ்ஜை முடிக்கும் வரையில் இதே மாதிரியே அணிந்து கொண்டிருக்கின்றனர். இது முற்றிலும் தவறாகும். மேலே குறிப்பிட்டது போன்று உம்றாவுடைய தவாஃபுக்கு நடுவில்தான் இவ்வாறு அணிந்து கொள்ள வேண்டும்.[1] இந்த தவாஃபை முடித்த பிறகு இரு புஜங்களையும் மறைக்கும் முறையில் மேலங்கியை அணிந்து கொள்ளவேண்டும்.

மேலே குறிப்பிட்டது போன்று ஹஜருல் அஸ்வத் — கல்லிலிருந்து தவாஃப் துவக்கப்பட வேண்டும். வலம் வருபவர்

---

1. ரமல் மற்றும் இள்திபாஉ — இவ்விரண்டும் மக்காவுக்குச் சென்றதும் நிறைவேற்றப்படும் 'தவாஃபுல் குதூம்'-க்கு மட்டும் உரியனவாகும். உம்றாவுக்காகச் செய்யும் தவாஃபும் முப்ரித் மக்காவை அடைந்ததும் நிறைவேற்றும் தவாஃப்பும் தவாஃப்புல் குதூம் எனும் தவாஃப்தான்! ஆனால் 'தவாஃபுல் இஃபாளா'விலும், த்வாஃபுல் வதாவிலும் ரமலும் இள்திபாவும் செய்யப்பட மாட்டாது. முஃப்ரித், தவாஃபுல் இஃபாளா மற்றும் தவாஃபுல் வதா இவற்றின் பொருளைக் கண்டறிய வேண்டுமாயின் 'ஹஜ்' எனும் தலைப்பில் பார்க்கவும்.

கடிகாரத்தின் முள் நகரும் திசைக்கு எதிர் திசையில் கஅபாவை வலம் வருவார். முடிந்த வரையில் கஅபாவை ஒட்டியே அவர் வலம் வரவேண்டும். 'ஹதீம்' எனும் இடத்தையும் தவாஃபில் உள்ளடக்கிக் கொள்ளவேண்டும். வலம் வருபவர் ருக்னுல்யமானி (தென்மேற்கு மூலை)க்கு அருகில் வரும் போது தனது வலது கரத்தால் அதனைத் தொட்டு 'பிஸ்மில் லாஹ்... அல்லாஹு அக்பர்' என்று கூறவேண்டும். தொட்ட கரத்தை முத்தமிடக் கூடாது. அதைத் தொடுவது கடினமாக இருந்தால் அதை நோக்கி சாடை செய்யாமலும் அல்லாஹு அல்லாஹு அக்பர் என்று சொல்லாமலும் சென்று கொண்டி ருக்க வேண்டும். ருக்னுல்யமானியிலிருந்து ஹஜருல் அஸ்வத் வரை செல்லும் வேளையில் திருக்குர்ஆனில் பின்வரும் வசனத்தை ஓதுவது முஸ்தஹப் — விரும்பத்தக்கதாகும்.

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

ரப்பனா ஆதினா ஃபித்துன்யா ஹஸனதன் (வ்) வஃபில் ஆகிரதி ஹஸனதன் (வ்) வகினா அதாபன்னார்.

எங்கள் இறைவனே, எங்களுக்கு இவ்வுலகிலும், மறுமை யிலும், நன்மையை வழங்குவாயாக! மேலும் நரகத்தின் வேதனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக!" (2:201)

வலம் வருபவர் இந்த தவாஃபை நிறைவேற்றுவதற்காக உளூ செய்து கொள்ள வேண்டும். மேலும் எல்லா விதமான அழுக்காறுகளைவிட்டும் அசுத்தமான பேச்சுக்களை விட்டும் விலகி தூய்மையாய் இருக்கவேண்டும். தவாஃபுக்கு நடுவே அல்லாஹ்வை நினைவு கூர்ந்த வண்ணம் இருக்க வேண்டும். அவனிடம் பிரார்த்தனை புரிந்த வண்ணம் இருக்கவேண்டும். திருக்குர்ஆன் வசனங்களையும் ஓதலாம்.

இங்கே ஒன்றை குறிப்பிட விரும்புகின்றோம். அதாவது நபி (ஸல்) அவர்கள் இந்த ஏழு சுற்றுக்கள் ஒவ்வொன்றிலும் ஓதுவதற்கென பிரத்தியேகமான துஆக்கள் இருப்பதாகச் சொல்ல வில்லை. பலவிதமான ஹஜ் வழிகாட்டி நூல்களில் கொடுக்கப் பட்டிருக்கின்ற துஆக்கள் மார்க்க ரீதியானவை அல்ல. இந்த துஆக்கள் அனைத்தும் ஏழு சுற்றுகளில் ஒவ்வொன்றுக்காக நபி (ஸல்) அவர்களால் ஏற்படுத்தப்பட்டனவாகும் என்று நம்புவது பித்அத் ஆகும். "உங்களுடைய ஹஜ் முறைகளை என்னிடமி ருந்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள்.

Scanned with CamScanner

நபி (ஸல்) அவர்களால கூறறுக் கொடுக்கப்படாத நடை முறைகளை மார்க்கத்தில் சேர்ப்பது மிகப்பெரிய குற்றமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாரேனும் நம்முடைய இந்த மார்க்கத்தில், அதில் இல்லாத ஒன்றை புதிதாக ஏற்படுத்தினால் அது நிராகரிக்கப்படக் கூடி யதாகும். — புகாரி - முஸ்லிம்

இந்த ஏழு சுற்றுகளையும் தொடர்ச்சியாக நிறைவேற்ற வேண்டும். எப்போதாவது அங்கு கூடியுள்ளோர் கட்டாயத் தொழுகை தொழப் போவதாக அறிவித்தால் அல்லது ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டால் வலம் வருபவர் தவாஃபை நிறுத்திக் கொண்டு அந்தத் தொழுகையில் கலந்து கொள்ள வேண்டும். தொழுகை முடிந்ததும் இடையில் நிறுத்தப்பட்ட சுற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஹஜருல் அஸ்வத் கல்லிலி ருந்து மீண்டும் தவாஃபை ஆரம்பிக்க வேண்டும்.

தவாஃப் செய்பவருக்கு அவர் சுற்றி முடிந்த சுற்றுகளின் எண்ணிக்கை உறுதியாய்த் தெரியவில்லையெனில் குறைந்த எண்ணிக்கையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு வலம் சுற்றவேண்டும். உதாரணமாக, தான் நிறைவேற்றியது ஐந்து சுற்றுக்களா அல்லது ஆறு சுற்றுக்களா என்று ஒருவருக்கு சந்தேகம் வந்தால் ஐந்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் இரண்டு சுற்றுக்களைச் சுற்றவேண்டும்.

தவாஃபின் போது ஆண்களுடன் கலந்து விடாமல் பெண்கள் எச்சரிக்கையாக தவாஃப் செய்ய வேண்டும். மேலும் ஹஜ்ருல் அஸ்வத்தை முத்தமிடும்போது ஆண்களை மோதிக் கொண்டு செல்லக்கூடாது. கூட்டம் அதிகம் உள்ள நேரத்தில் கஅபாவை விட்டு சற்று விலகிச் சுற்றுவதே பெண்களுக்கு சிறப்பானது. கூட்டம் கலைந்த பிறகு அருகில் வரலாம். தவாஃபை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் வாசனைப் பொருள்கள், ஆபரணங்களைத் தவிர்த்துக் கொள்வது பெண் களுக்கு முக்கியமாகும். மேலும் தவாஃப் சுற்றி வரும்போது பெண்கள் தங்கள் முகத்தை மறைத்துக் கொள்ளலாம்.

தவாஃப் செய்பவர் அதனை முடித்த பிறகு மகாமே இப்ராஹி முக்கு எதிரில் இரு ரக்அத் தொழவேண்டும். கூட்டம் அதிகம் இருப்பதால் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் அங்கு தொழுதிட முடியவில்லையென்றால் பள்ளிவாசலில் எந்தப் பகுதி யிலும் தொழலாம். முதல் ரக்அத்தில் திருமறையின் 101 ஆவது

Scanned with CamScanner

அத்தியாயமான 'அல்காஃபிரூன்' அத்தியாயத்தையும் இரண்டாம் ரக்அத்தில் 112 ஆவது அத்தியாயமான 'அல்இக்லாஸ்' அத்தியாயத்தையும் ஓதுவது சுன்னத் ஆகும்.

தொழுத பிறகு பின்வருமாறு செய்வது சுன்னத் ஆகும்.

(1) ஜம்ஜம் கிணறுக்குச் சென்று அதன் நீரை அருந்த வேண்டும். அதனைத் தலையில் ஊற்றிக் கொள்ளவும் வேண்டும்.

(2) கஃபாவுக்குத் திரும்பிவந்து ஹஜருல் அஸ்வத் கல்லை வலது கரத்தால் தொட வேண்டும்.

பின்னர் ஸஃபா மலைக்குச் சென்று ஸயீ செய்யத் தொடங்க வேண்டும்.

## ஸயீ

புனிதப் பயணி ஸஃபா மலையை அடைந்ததும் திருக்குர்ஆனின் பின்வரும் வசனத்தை ஓத வேண்டும்.

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيمٌ.

இன்னஸ் ஸஃபா வல் மர்வத மின் ஷஆயிரில் லாஹி ஃபமன் ஹஜ்ஜல் பைத அவிஃதமர ஃபலா ஜுனாஹ அலைஹி அ(ன்)ய்யத்தவ்வஃப பிஹிமா வமன் ததவ்வஅ கைரன் ஃபஇன்னல்லாஹ ஷாகிருன் அலீம்.

நிச்சயமாக 'ஸஃபா, மர்வா' (எனும் இரு குன்றுகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளனவாகும். ஆகையால் யார் இறையில்லத்தை ஹஜ் அல்லது உம்றா செய்கின்றாரோ அவர் மீது அந்த இரண்டுக்குமிடையே ஸயீ செய்வதில் குற்றமில்லை. மேலும் எவரேனும் தாமாக விரும்பி (அதிகப்படியாக இதுபோன்ற) நன்மையைச் செய்தால் அல்லாஹ் அதை மதிப்பவனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான். (2:158)

இந்த வசனத்தை ஓதியதும்

نَبْدَأُ بِمَا بَدَأَ اللهُ بِهِ நப்தஉ பிமா பதஅல்லாஹு பிஹ

Scanned with CamScanner

அல்லாஹ் எதைக்கொண்டு ஆரம்பித்தானோ அதைக் கொண்டே நாமும் ஆரம்பம் செய்வோம்" என்று சொல்ல வேண்டும்*.

இப்போது புனிதப் பயணி ஸஃபா மலையில் எவ்வளவு தூரம் ஏறினால் அங்கிருந்து கஅபாவைக் காண முடியுமோ அவ்வளவு தூரம் அதில் ஏறுவார். கஅபாவை பார்த்த நிலையில் இவ்வாறு கூறுவார்.

اَللّٰهُ اَكْبَرُ. اَللّٰهُ اَكْبَرُ. اَللّٰهُ اَكْبَرُ. لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ. لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ. يُحْيِي وَيُمِيْتُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ. لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ. اَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْاَحْزَابَ وَحْدَهُ.

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது வஹு வ அலா குல்லி ஷையின் கதீர். லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு அன்ஜஸ வஃதஹு வநஸர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹதஹு.

"அல்லாஹ் பெரியவன். அல்லாஹ் பெரியவன். அல்லாஹ் பெரியவன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஆட்சியதிகாரம் அவனுக்குரியதே. புகழ் அனைத்தும் அவனுக்கே. அவனே வாழ்வையும் மரணத்தையும் கொடுக்கின்றான். மேலும் அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவனாவான். அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையும் இல்லை. தன் வாக்குறுதியை நிறைவேற்றினான். தன் அடியாருக்கு உதவி செய்தான். அவன் ஒருவனே எல்லாப் பிரிவினரையும் தோற்கடித்தான்."

பிறகு அவர் தன் இரு கரங்களையும் உயர்த்தி பிரார்த்தனை செய்வார். அந்த இடத்தில் இந்த துஆவையும் திக்ரையும் மீண்டும் மீண்டும் ஓதுவார்.

---

* இதன் கருத்து: அல்லாஹ் எவ்வாறு ஸஃபா மலையைக் கொண்டு இந்த வசனத்தை ஆரம்பம் செய்துள்ளானோ அவ்வாறு நாமும் ஸஃபா மலையிலிருந்து ஸயீயை ஆரம்பம் செய்வோம். இவ்வாறே முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Scanned with CamScanner

பிறகு ஸஃபா மலையிலிருந்து இறங்கி நேராக மர்வா நோக்கி நடப்பார். இரு மலைகளுக்கும் இடைப்பட்ட பாதையின் ஒரு பகுதியில் வேகமான நடையை மேற்கொள்வார். இந்தப் பகுதியின் ஆரம்பத்திலும் முடிவிலும் பச்சை விளக்குகள் அமைக்கப்பட்டு அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றது*. இரு மலைகளுக்கும் இடையே இந்தப் பகுதியில் மட்டும்தான் வேகமான நடையை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். சிலர் ஸயீயின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் ஓட்டத்தையே மேற்கொள்கிறார்கள். இது முற்றிலும் தவறானதாகும். இதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது பச்சை விளக்குகளால் அடையாளமிடப்பட்டிருக்கும் இந்தப் பகுதியில் வேகமாக நடக்க வேண்டும் என்பது ஆண்களுக்கு மட்டும்தான். பெண்கள் இரு மலைகளுக்கும் இடைப்பட்ட தூரம் முழுவதும் சாதாரணமாக நடந்து செல்வர்.

ஸயீ செய்பவர் ஸஃபா மலையில் செய்தது போன்று மர்வா மலையிலும் கொஞ்ச தூரம் ஏறி கிப்லாவை முன்னோக்கி நின்றுகொண்டு மூன்று முறை துஆவும் திக்ரும் செய்வார். பிறகு மர்வாவை விட்டு இறங்கி நேராக ஸஃபா நோக்கி நடப்பார். இடையில் பச்சை விளக்குகளால் அடையாளமிடப்பட்ட பகுதியில் வேகமாகச் செல்வார். இவ்வாறாக இருமலைகளுக்கும் இடையே ஏழு முறை நடப்பார்.

ஸயீக்கு இடையில் அல்லாஹ்வை நினைத்துக் கொண்டும் அவனிடம் பிரார்த்தனை செய்து கொண்டும் இருப்பார். ஸயீயில் ஓதுவதற்கென பிரத்தியேகத் துஆ எதனையும் நபி (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தரவில்லை. ஆனால் ஸஃபாவுக்கு இடையே நபித்தோழர் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் பின் வருமாறு துஆவை ஓதியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

رَبِّ اغْفِرْ وَارْحَمْ إِنَّكَ أَنْتَ الْأَعَزُّ الْأَكْرَمُ.

ரப்பிஃ — ஃபிர் வர்ஹம் இன்னக அன்தல் அஅஸ்ஸுல் அக்ரம்.

---

* ஸஃபாவுக்கும் மர்வாவுக்கும் இடையிலுள்ள பகுதி உண்மையில் ஒரு ஓடையாகும். மேலும் வேகமாக. நடந்து செல்ல வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதி அந்த ஓடையின் நடுப்பகுதியாகும். அங்கு வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. நபி (ஸல்) அவர்கள் இந்தப் பகுதியில் வேகமாக நடந்து சென்றார்கள்.

Scanned with CamScanner

"என் இறைவா, (என்னை) மன்னித்து அருள் பாலிப் பாயாக. திண்ணமாக நீ மேலாதிக்கமுள்ளவனாகவும், கண்ணிய மிக்கவனாகவும் இருக்கின்றாய்.[1]"

ஆகவே, ஸயீக்கு இடையே இந்த துஆவை ஓதுவதில் குற்றமில்லை.[2]

உளூவுடன் ஸயீயை நிறைவேற்றுவது சிறந்தது. ஆயினும் ஸயீ செல்லுபடியாகுவதற்கு உளூ முன் நிபந்தனை அல்ல. ஆனால் ஸயீயை நிறைவேற்றும்போது பெருந்துடக்குடன் இருப்பது கூடாது. உடல் மற்றும் உடையில் எவ்வித அழுக்கு களும் இல்லாமல் தூய்மையாய் இருப்பது விரும்பத் தக்கதாகும். மாதவிடாய் உள்ள பெண் ஸயீயை நிறைவேற்றலாம்; தவாஃப் செய்யக்கூடாது!

# தலைமுடி மழித்தல் அல்லது குறைத்தல்

புனிதப் பயணி ஸயீயை நிறைவேற்றிய பிறகு தன் தலையை மழித்துக் கொள்வார்; அல்லது முடியைக் குறைத்துக் கொள்வார். மழிப்பதே ஆண்களுக்குச் சிறந்தது.

யாரேனும் ஹஜ்ஜுக்கு முன்னால் உம்றாவை நிறைவேற்றினால் அவர் தலைமுடியைக் குறைத்துக் கொள்வது நல்லது; ஹஜ்ஜையும் முடித்த பிறகு தலைமுடியை மழித்துக் கொள்வது சிறப்பானது. இதுவே சுன்னத்திற்கு ஏற்ற முறையாகும். நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் "என்னோடு யார் தொடர்ந்து ஹஜ்ஜையும் நிறைவேற்றுகின்றாரோ, அவர் உம்றாவுக்குப் பிறகு தலைமுடியைக் குறைத்துக் கொள்ளட்டும்!" என்று அறிவுறுத்தியுள்ளார்கள். — அறிவிப்பாளர் : ஜாபிர் (ரலி)

தன் தலைமுடியை யார் குறைத்துக் கொள்கின்றார்களோ அவர்கள் தலை முழுவதும் குறைத்துக் கொள்ளவேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடி வெட்ட வேண்டும் - சிலர் தலையின் சில பகுதியில் மட்டும் முடியைக் குறைத்துக் கொள்கின்றனர். இது சட்டத்தின் தேட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதில்லை.

பெண்கள் தலையை மழித்துக் கொள்ள அனுமதி இல்லை.

---

1 & 2. நாஸிருத்தீன் அல்பானியின் "மனாஸி குல் ஹஜ்வல் உம்றா" எனும் நூலில் பக்கம். 26

அவர்கள் தலை முடியில் ஒரு இஞ்ச் அளவு குறைத்துக் கொள்வது போதுமானது. தலையில் பின்னலிட்டிருக்கும் பெண்கள் ஒவ்வொரு பின்னலிலும் ஒரு இஞ்ச் அளவுக்கு வெட்ட வேண்டும்.

தலை முடியை மழிப்பது அல்லது குறைப்பதுதான் உம்ராவின் கடைசி செயலாகும். இஹ்ராமின் மூலம் விதிக்கப்பட்ட அனைத்துத் தடைகளும் இதன் மூலம் நீக்கப்பட்டுவிடும். இவ்வாறு இஹ்ராமிலிருந்து விடுபடுவதற்கு 'தஹல்லுல்' என்று சொல்லப்படும்.

Scanned with CamScanner